உ
சிவமயம்

# சிவபூமி

**Monthly Journal of Sivapoomi**

அறிமுக விலை :- 20/=

தொலைபேசி - 021 222 7938

Email - sivapoomiprinters@gmail.com

சிவம் - 01 | விளம்பி வருடம் ஆடித் திங்கள் 16ஆம் நாள் 01.08.2018 | பூமி - 06


## யாழ். கோட்டைப் பிரதேசம் மக்கள் குடியிருப்புப் பகுதியாக இருந்துள்ளது

### பேராசிரியர் புஸ்பரட்ணம் தகவல்

"யாழ். கோட்டை அமைந்துள்ள பிரதேசம் பல நூறு வருடங்களுக்கு முன்னர் மக்கள் குடியிருப்பு பகுதியாக இருந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது இதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன". இவ்வாறு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் திரு.ப. புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.


மேற்படி ஆய்வு தொடர்பாக, விளக்கமளிக்கும் நிகழ்வு கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் திணைக்கள விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றபோது, பேராசிரியர் புஸ்பரட்ணம் மேலும் தகவல் தருகையில், "போத்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்பே, கோட்டைப் பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளார்கள். இப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது தமிழக நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கடல் மார்க்கமாக பிறநாடுகளுடன் வர்த்தக செயற்பாடுகள் இடம் பெற்றமைக்கான ஆதாரங்களுடன் சோழர் கால கட்டட சிதைவுகளும் காணப்படுகின்றன. கோட்டை அமைந்துள்ள பிரதேசம் மக்கள் குடியிருப்பாக இருந்தமையே அங்கு போர்த்துக்கேயர் கோட்டை அமைப்பதற்கு முக்கிய காரணம்" என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வின்போது, பிரித்தானிய தொல்லியல் ஆய்வுப் பேராசிரியர் டேவிட் கொலிங்கம் தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டார்கள்.




தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகின்றது.


(சிறப்புக் கட்டுரை 3ஆம் பக்கத்தில்)



யாழ் குடாநாட்டில் முருகப் பெருமானுக்கு மகோற்சவப் பெருவிழாக்கள் இடம்பெற்று வரும் காலப்பகுதி இது. வள்ளி தெய்வயானை தேவியர் சமேதராக வீற்றிருக்கும் முருகப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!

## இராமகிருஷ்ண மிஷன் புதிய தலைவர்





இராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை) தலைவராகப் பணியாற்றிய சுவாமி சர்வரூபானந்தா அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதால், புதிய தலைவராக சுவாமி அக்ஸராத்மானந்தா அவர்கள் இவ்வாரம் பதவியேற் கிறார்.

(முழுமையான செய்தி 2ஆம் பக்கத்தில்)

**மாதாந்த செய்திப் பத்திரிகை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலின் மண்டலாபிஷேகப் பூர்த்தி நிகழ்வு (18.07.2018)





தென்னிந்தியா சிரவை ஆதீன குருமுதல்வர் திருவாசக அரண்மனைக்கு வருகை



மாவிட்டபுரத்தில் புதிய மணிக்கோபுரம்



மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப் பட்ட மணிக்கோபுரத்திற்கு லண்டனிலிருந்து ஆயிரம் கிலோ எடையுள்ள புதிய மணி கொண்டுவரப்பட்டு கோபுரத்தில் பொருத்தப்பட்டது.

## கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் ஆடிப்பிறப்பு தினத்தன்று நடைபெற்ற பூசை வழிபாடுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி

சிவம் - 01 01.08.2018 பூமி - 06

## சிந்தனை செய்வோம்

## யாழ். குடாநாட்டில் மதுபானச்சாலைகளை மூடவேண்டிய நிலை உருவாக வேண்டும்

இம் மண்ணில் அடாவடித்தனங்களும், அநியாயங்களும் பெருமளவில் காணப்படுவதற்கு மூலகாரணமாக விளங்குவது மதுபானம் அருந்துவோர் தொகை அதிகரிப்பேயாகும். என்றும் இல்லாதவாறு யாழ்.குடாநாட்டில் மதுபானம் அருந்துவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. மதுபானச்சாலைகளில் மிக இளம் வயதினர் எதுவிதமான அச்சமும், தயக்கமும் இன்றி மதுபானத்தை கொள்வனவு செய்வதும், மதுபானத்தை அருந்துவதும் வழக்கமாகிவிட்டது.

யாழ்.மாவட்டத்தில் பொழுது சாயும் வேளையில் மதுபான விற்பனை நிலையங்களின் முன்பாக பெரும் சனக்கூட்டம் காட்சியளிப்பது இப்போது சர்வசாதாரணமாகிவிட்டது. இதற்கும் மேலாக, றெஸ்ரோறன்ட் என்ற பதிவிலும், விளையாட்டுக்கழகம் என்ற பதிவிலும் மதுபானச் சாலைகள் தாராளமாக இயங்குகின்றன. இவற்றுடன், அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர் விடுதிகளிலும் மதுபான நிலையங்கள் சுதந்திரமாக செயற்படுகின்றன. சில திருமண மண்டபங்கள், உணவு விடுதிகள் என்பவைகளுடன் இணைந்தும் மதுபானசாலைகள் காணப்படுகின்றன. திருமண வைபவங்கள் நடைபெறும்போது கூட, அங்கு வந்துள்ள இளைஞர்கள் மண்டபத்துக்கு அருகேயுள்ள மதுபானச்சாலைக்குச் சென்று மது அருந்தும் சம்பவங்களும் சர்வசாதாரணமாக இடம்பெற்றுவருகின்றன.

மிக இளம் வயதினிலே மதுப் பழக்கத்தினால் பாதிக்கப்பட்டு, பலர் நோயாளிகளாகி வைத்தியசாலைகளில் அவஸ்தைப்படுவதையும் இப்போது காணக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய நிலைமைகளை தடுப்பதற்கு சகலரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

மதுபான வாணிபத்தில் ஈடுபடும் அனைவரும் தங்கள் வாணிப செயற்பாடு விடயத்தில் தூரநோக்கோடு சிந்தித்து, சமூகத்திற்கு உகந்த வாணிபத்தை மேற்கொள்ள முன்வரவேண்டும். சமூகத்தை காப்பதற்கு நாம் முன்வராதுவிட்டால் எதிர்காலம் என்னவாகும் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எம் இனத்தை தற்போது பிறர் அழிக்கவில்லை. நாமே நம் இனத்தை அழித்து வருகின்றோம். பாடசாலை மாணவர்கள் தொடங்கி, பல்கலைக்கழக மாணவர்கள் வரை பலர் மதுவுக்கு அடிமையாகி வருவது வேதனைதரும் செய்தியாகும். ஒழுக்க விழுமியங்களில் பெருமதிப்புப் பெற்ற எம் சமூகம், இன்று அனைத்தையும் இழப்பதற்கு மூலகாரணமாக விளங்குவது மதுபாவனை என்பதை அறிவுடைய சமூகம் ஏற்றுக்கொள்ளும்.

எனவே, இயன்றவரை மதுபானச்சாலைகளை மூடுவதற்கு நாம் ஆயத்தமாகாதுவிட்டால், மிகப்பெரிய வரலாற்றுத் தவறை எம் சமூகத்திற்கு நாமே இழைத்தவர்களாவோம் என்பது முற்று முழுதான உண்மையாகும்.

## இந்துக்களின் விரதங்களும் விசேட தினங்களும் (ஆகஸ்ட் 2018)

| | | | |
|---|---|---|---|
| 05 | ஞாயிறு | : | கார்த்திகை விரதம் |
| 07 | செவ்வாய் | : | ஏகாதசி விரதம் |
| | | | நான்காம் ஆடிச் செவ்வாய் |
| 09 | வியாழன் | : | பிரதோஷ விரதம் |
| 11 | சனி | : | ஆடி அமாவாசை விரதம் |
| 13 | திங்கள் | : | ஆடிப்பூரம் |
| 14 | செவ்வாய் | : | நாகசதுர்த்தி விரதம் |
| | | | ஐந்தாம் ஆடிச் செவ்வாய் |
| 16 | வியாழன் | : | சஷ்டி விரதம் |
| 19 | ஞாயிறு | : | முதலாம் ஆவணி ஞாயிறு |
| 21 | செவ்வாய் | : | ஆவணி மூலம் |
| 22 | புதன் | : | ஏகாதசி விரதம் |
| 24 | வெள்ளி | : | ஆவணி ஓணம், |
| | | | வரலட்சுமி விரதம் |
| 25 | சனி | : | நடேசர் அபிஷேகம் |
| 26 | ஞாயிறு | : | பூரணை விரதம் |
| | | | இரண்டாம் ஆவணி ஞாயிறு |
| 30 | வியாழன் | : | சங்கடஹர சதுர்த்தி விரதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி



விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து.

## சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் மண்டலாபிஷேகம் நிறைவு

யாழ். நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்திலுள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் மண்டலாபிஷேக நிகழ்வு கடந்த மாதம் (ஜுலை) 18ஆம் திகதியன்று நிறைவுபெற்றுள்ளது. அன்றைய தினம் 1008 சங்காபிஷேகம் மற்றும் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

கடந்த ஜுன் மாதம் 25ஆம் திகதியன்று நடைபெற்ற மேற்படி திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவைத் தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று வந்தது.

## திரு.வே.பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவரான திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவமெய்திய 27ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நினைவுப்பேருரை, இம்மாதம் 5ஆம் திகதி காலை 10.00 மணிமுதல், கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்து மாமன்றத் தலைவர் திரு.மா.தவயோக ராஜா தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வின் போது யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாட் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் "இலங்கையில் இந்துக்கள் - குடித்தொகை ஆய்வு" என்ற பொருளில் நினைவுப் பேருரை ஆற்றுவார்.

## கீரிமலையில் நீத்தார் நினைவு

அகில இலங்கை இந்து மாமன்றம் வழமைபோல இவ்வருடமும் ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலையில் நீத்தார் நினைவு நிகழ்வை நடத்துகிறது. அமாவாசை தினமான இம்மாதம் 11ஆம் திகதியன்று கீரிமலையிலுள்ள சிவபூமி யாத்திரிகர் மடத்தில் நிகழ்வு இடம்பெறும்.

## சிவநெறிச்செல்வர் ந.சச்சிதானந்தன் அவர்களின் பவளவிழா

சிவநெறிச்செல்வர் நடராஜா சச்சிதானந்தன் அவர்களது அகவை 75 நிறைவையொட்டிய பவளவிழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் லண்டனில் நடைபெறவிருக்கின்றது. இவரது சமய, சமூகநல சேவையைப் பாராட்டி சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கின்றது.

யாழ். இணுவில் கிராமத்தைச் சேர்ந்த இவர், உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவர். லண்டனில் சமய ஆன்மீக, சமூக நலப் பணிகளை ஆற்றிவரும் திரு.சச்சிதானந்தன் லண்டனில் முதன்முதலாக சைவத் திருக்கோயில்களின் ஒன்றியத்தை உருவாக்கி, அதனைத்துலக சைவ மாநாட்டை ஆரம்பித்து வைத்த பெருமைக்குரியவர்.

## இராமகிருஷ்ண மிஷன் புதிய தலைவர் பதவியேற்பு

இராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை) புதிய தலைவராக சுவாமி அக்ஸராத்மானந்தா அவர்கள் இவ்வாரம் பொறுப்பேற்றுக் கொள்கிறார்.

இதுவரை காலமும் தலைவராகப் பணிபுரிந்த சுவாமி சர்வரூபானந்தா அவர்களின் இடத்திற்கே புதிய நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

சுவாமி சர்வரூபானந்தா அவர்களுக்கான பிரிவுபசார வைபவமும், சுவாமி அக்ஸராத்மானந்தா அவர்களுக்கான வரவேற்பு உபசார வைபவமும் எதிர்வரும் 5ஆம் திகதியன்று கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் ஆலய மண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது.

சுவாமி அக்ஸராத்மானந்தா அவர்கள் யாழ். கோப்பாயைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் பண்டிதர் பஞ்சாட்சரசர்மா அவர்களது புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து மாமன்றத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்தவர்களையும், சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய பெரியவர்களையும், நினைவுகூர்ந்து தீபச்சுடர் ஏற்றும் இந்த வைபவம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில், மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவிருக்கிறது. மாமன்ற உப தலைவரான விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்கள் நிகழ்வை தொடக்கி வைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - மகோற்சவப் பெருவிழா

இவ்வருடம் மகோற்சவப் பெருவிழா 13.08.2018ஆம் திகதியன்று (திங்கட்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. காலை 10.00 மணிக்கு கொடியேற்ற வைபவம் இடம்பெறுகிறது. மூன்றாவது நாளான 15ஆம் திகதியன்று மாலை 6.00 மணிக்கு திருமுறைத் திருவிழாவும், ஆறாவது நாளான 18ஆம் திகதியன்று மாலை 6.00 மணிக்கு திருமஞ்சத் திருவிழாவும், ஒன்பதாம் நாளான 21ஆம் திகதியன்று பிற்பகல் 2.00 மணியளவில் வேட்டைத் திருவிழாவும், அதேதினம் மாலை 6.00 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும், பத்தாம் நாளான 22ஆம் திகதியன்று மாலை 4.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும் இடம்பெறவிருக்கின்றன.

பதினொராம் நாளான 23ஆம் திகதியன்று (வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், பன்னிரண்டாவது நாளான 24ஆம் திகதியன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். அதே தினம் மாலை 6.00 மணிக்கு கொடியிறக்க வைபவம் இடம்பெறும். மறுநாள் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும், அதேதினம் மாலை 3.00 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறுவதுடன், இவ்வருட மகோற்சவ பெருவிழாவும் நிறைவுபெறுகிறது.

ஆலயத்தில் மகோற்சவ காலத்தின் போது காலை நேரப் பூசை அதிகாலை 5.30 மணிக்கும், மாலை நேரப் பூசை பிற்பகல் 4.00 மணிக்கும் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம்

## வரலாற்றில் சில பதிவுகள்

யாழ்ப்பாணத்தின் வடபால் தெல்லிப்பழை துர்க்காபுரப் பகுதியில் காங்கேசன்துறைப் பெருந்தெரு வழியே எட்டாவது மைல் கல் தொலைவில் அமைந்திருக்கும் அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம் இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுப் பெருமை கொண்டது. இந்த ஆலயத்தின் பூர்வீக வரலாற்றையும், இன்றைய எழுச்சிப் பெருநிலையையும் அறிந்து கொள்வது பயன் தருவதாகும்.

### பூர்வீகச் சிறப்பு

தொன்று தொட்டு வளரும், பண்பாடும் சார்ந்த மக்கள் இலங்கும் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை கொண்டுள்ள பிரிவுகளிலே உழவுத் தொழிலைக் கைக்கொண்டு வரும், உயர் புகழுக்கு வித்தாக கொடைப்பண்பு செறிந்திலங்கும் உழுகுடைப்பகுதி வவுணாவத்தையிலே சைவ மரபிலே வந்தவர் சைவப் பெரியார் கதிர்காமர்.

ஏறக்குறைய 1750ஆம் ஆண்டளவில் கதிர்காமர் இந்தியாவுக்குத் தலயாத்திரைக்காகப் புறப்பட்டு காங்கேசன்துறையில் தோணியேறித் தென் இதியாவின் கீழைக்கரையில் உள்ள வேதாரணியத்திலே கரையிறங்கி அவர் அங்கிருந்து பாதயாத்திரையாகச் சென்று பல ஆலயங்களை வழிபாடு செய்துகொண்டு காசித்திருத்தலம் வரை சென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறைய பத்து வருடங்கள் கடந்தன. இக்கால எல்லைக்குள் அவர் தமிழையும் சமஸ்கிருதத்தையும் நன்கு கற்றுத் தேறி ஒரு துர்க்கை உபாசகராகவும் மாறிவிட்டார். அதனால் ஏறக்குறைய 1760ஆம் ஆண்டளவில் தாம் யாழ்ப்பாணம் திரும்பும்போது துர்க்காதேவி யந்திரமொன்றையும், வெண்கலத்தினாலமைந்த 'திருமுகக்கெண்டி' உருவமொன்றையும் கையோடு கொண்டு வந்தார். அன்பர் கதிர்காமர் அவர்கள் காசியில் பலநாள் தங்கியிருந்தார். இந்தியா முழுவதிலுமுள்ள சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள்ளும் காசியிலுள்ள சொப்பனேஸ்வரி பீடம் முக்கியமானது. துர்க்காதேவி சகல கலைகளுடனும் பொலிந்திருக்கும் பீடம் அது. அன்பர் கதிர்காமர் குறித்த யந்திரத்தை அங்கிருந்தே பெற்றிருந்தார் என எண்ணுதற்கு இடமுண்டு.

காசியாத்திரையை முடித்துக்கொண்டு காங்கேசன்துறையை வந்தடைந்த இப்பெரியார் கீரிமலையில் புண்ணிய தீர்த்தமாடி அங்கிருந்து நடந்து மூன்றுமைல் தூரம் இவ்விடம் நோக்கி வந்து கொண்டிருந்தார். திருவருள் அவரது நடையிலே தளர்வைத் தோற்றுவித்தது. ஆயிரக்கணக்கான மைல் தொலைவெல்லாம் நடைகண்ட நம் பெருந்தகையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலிலே அடங்கிக் கிடக்கும் துர்க்கை அங்கிருந்து கொண்டு அனைவருக்கும் திருவருள் பாலிக்கும் திருக்கருணை கொண்டாள். நடை தளர, உடல் தளர, அண்டியிருந்த இலுப்பைத் தோப்பிலே இளைப்பாறினார். கொண்டு வந்த துர்க்கா சக்கரத்தை அங்கே தாபிக்குமாறு ஆணை பிறந்தது. அவ்வாணையைச் சிரமேல் தாங்கி மரத்தடியிலே சக்கரத்தை அமைத்து வழிபடத் தொடங்கினார். கதிர்காமர் தாம் கொண்டு வந்த யந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் ஸ்தாபனம் செய்து வழிபட்ட இடமே இன்று துர்க்காதேவி தேவஸ்தானமாக வானளாவும் கோபுரங்களும், அலங்கார வளைவு கொண்ட நுழைவாயிலும், அழகிய தெப்பக்குளமும் எழிலூட்டி நிற்கக் காட்சி தருகின்றது. கதிர்காமரின் ஆன்மார்ந்த பூசை நிலையமாயிருந்த இந்த ஆலயம் பரார்த்த பூசைக்குரிய நிலையமாய் இன்று விருத்தி அடைந்தவற்றை மேற்கூறிய செய்தி உணர்த்துகிறது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலோடு இவ்வாலயத்திற்கு ஆரம்ப காலம் முதலே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளதை பழைய ஏட்டுப்பிரதிகள் குறிப்பிடுகின்றன. 1829ஆம் ஆண்டு புரட்டாதி விஜயதசமி தினத்தன்று மாவை முருகன் இவ்வாலயத்திற்கு எழுந்தருளி வந்து வன்னி வாழை வெட்டும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. இவ்வாலயத்தில் தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் மற்றொரு சிறப்பம்சம் புராணபடனமாகும். வருடம்தோறும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியன கிரமமாகப் படிக்கப் பெற்று வந்துள்ளன. பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வும் இடம்பெற்றுவருகின்றன. புராண படனம் நிகழ்த்துபவர்களையும் ஓதுவார்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் இங்கு சிறப்பாக நடைபெற்றது.

## தர்மகர்த்தா சபையும் நிர்வாக சபையும்

1948இல் தனி முகாமையாளர் திரு.க.நாகநாதர் அவர்களினால் பதினொரு பேரைக்கொண்ட தர்மகர்த்தா சபையினரிடம் ஆலய பரிபாலனம் ஒப்படைக்கப்பட்டது. 1965இல் உப சபையாக பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு அவர்களே பரிபாலனப் பொறுப்பை ஏற்று நடத்தினர். நிர்வாக சபையினரின் பராமரிப்பில் அன்று முதல் இன்றுவரை ஆலயம் சிறப்பான வகையில் வளர்ச்சிபெற்று வருகிறது. நிர்வாக சபையின் ஏற்பாட்டில் முதலாவது கும்பாபிஷேகம் 1965ஆம் ஆண்டு ஆவணி ஓணத்திலும், இரண்டாவது கும்பாபிஷேகம் 1981 சித்திரை உத்தரத்திலும், மூன்றாவது கும்பாபிஷேகம் 1997 ஆவணிச் சுவாதியிலும், நான்காவது கும்பாபிஷேகம் 2011 தைத்திங்கள் 10ஆம் நாளிலும் (24.01.2011) சிறப்பாக நடைபெற்றது. முதலாவது நிர்வாக சபையின் தலைவராக அமரர் தியாகராசா அவர்கள் (கல்வி அதிகாரி) சிறப்பாக வழிநடத்தினார். அவரின் பின் அமரர் திரு.து.ஜெயரட்ணம் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர்) வழிநடத்தினார். அவரின் மறைவின் பின் 1977 முதல் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைவராகப் பணிபுரிந்து ஆலயப் பணிகளுடன் பன்முகப்பட்ட சமுதாய சமூகப்பணிகளையும் ஆற்றி வந்தார். இது ஒரு வரலாற்றுப் பதிவாக இருப்பதுடன், சைவத் தமிழ் உலகத்தினால் என்றென்றும் மதித்துப் போற்றப்படும் பெருமையையும் அம்மையார் பெற்றிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதியன்று அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் ஆலய நிர்வாக சபைத் தலைவராகப் பொறுப்பேற்று, அம்மையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சிறப்பாகச் சேவையாற்றி வருகிறார். இவரது சேவைக்காலத்தின் போது 2011ஆம் ஆண்டு இங்கு மீண்டும் புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது. ஆலயத்தின் முன்பக்கம் புதிய மண்டபம் அமைக்கப்பட்டதுடன் லண்டனிலிருந்து 1200 கிலோ எடையுடைய கண்டாமணி கொண்டுவரப்பட்டு புதிய மணிக்கோபுரத்தில் பொருத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஆலயத்தின் உட்பிரகாரங்கள் பலவித சிற்ப வேலைப்பாடுகளுடன் புதுப்பிக்கப்பட்டன.

## தென்திசை வாசல் மற்றும் குபேரவாசல் கோபுரங்கள்

ஆலயத்தின் தென்திசை வாயிலில் புதிய கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு, 2017 தை மாதம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. வடக்கு வாயிலில் அமைக்கப்பட்ட குபேர வாசல் கோபுரத்திற்கான கும்பாபிஷேகம் இவ்வருடம் (2018) தை மாதம் இடம்பெற்றது. மேற்கு வாசல் கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இவ்வருடம் பங்குனி உத்தர தினத்தன்று இடம்பெற்றது. கட்டட வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் தை மாதம் மேற்குவாசல் கோபுர கும்பாபிஷேகம் இடம்பெறும் என்பது அடியாரின் எதிர்பார்ப்பாகும்.

## மகோற்சவப் பெருவிழா

துர்க்காதேவி ஆலய வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது 1968ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகோற்சவமாகும். ஆவணி மாத பூர்வபட்சத்தில் வரும் பூர நட்சத்திரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவோண நட்சத்திரத்தில் தீர்த்த விழாவோடு நிறைவு பெறுவது ஆலயத்தின் மகோற்சவ ஒழுங்காகும். பன்னிரண்டு தினங்கள் மகோற்சவம் நடைபெற்று வருகிறது. இங்கு மகோற்சவப் பெருவிழா ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுவது குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு துர்க்காதேவிக்கு புதிய திருமஞ்சமொன்று வடிவமைக்கப்பட்டது. அது முதலாக ஆண்டு தோறும் மகோற்சவத்தின் போது ஆறாவது நாளன்று திருமஞ்சத் திருவிழா நடைபெற்று வருகிறது.

2013 ஆம் ஆண்டு இங்கு புதிதாக சைலாசவாகனம் ஒன்று உருவாக்கப்பட்டது. வருடாந்த மகோற்சவ காலத்தில் ஒன்பதாவது நாளன்று இங்கு கைலாச வாகனத் திருவிழா இடம்பெற்றுவருகிறது.

## துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தேவஸ்தானம் ஆற்றும் பன்முகப் பணிகளில் தலையாய ஓர் அறப்பணியாகக் கருதப்படுவது துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணியாகும். ஆதரவற்ற ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுபிள்ளைகளை ஆதரித்துக் கல்வியூட்டி, உணவூட்டி சகல பராமரிப்பையும் மேற்கொண்டு பணிபுரிவதற்கு ஆரம்பத்தில் சிறிய கட்டடத்தில் இடம் கிடைத்தது. இவ் இல்லம் - 1982ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு சகல வசதிகளுடன் கூடிய மாடிக் கட்டடம் கட்டப்பட்டு மகளிர் இல்ல செயற்பாடுகள் இங்கு இடம்பெற்றுவருகின்றன.

## சிறுபெண் பிள்ளைகளுக்கான புதிய விடுதிச்சாலை

2009ஆம் ஆண்டில் வன்னிப் பகுதியில் போர் நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட சிறு பெண் பிள்ளைகளையும் மகளிர் இல்லத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இதனால் ஏற்பட்ட இடநெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் ஆலயத்தின் தெற்குவீதியில் இவர்களுக்கான புதிய விடுதிச்சாலையொன்று புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது.

## பல்துறைப்பட்ட சமூகப்பணிகள்

ஆலயங்களெல்லாம் அறச்சாலைகளாக அமையவேண்டும் என்ற புனித நோக்கத்திற்கமைய இவ்வாலயம் ஆற்றிவரும் பணிகள் குறிப்பிடத் தக்கதாகும். சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் பிறந்தநாள் அறநிதியம் 1989ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை சிறப்பாக இயங்கி வருகின்றது. ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 7ஆம் திகதியில் இதன் பயன்பாடு நிகழ்கின்றது. நூல் வெளியீடு, அறிஞர்களை கௌரவித்தல், வறுமைக்கோட்டிற்குக் கீழ்ப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவுதல், கைதடி வயோதிபர் இல்லத்திற்கு அன்பளிப்பு, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு உதவியமை. யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை இயந்திரங்கள் வாங்க உதவியமை என்பன குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். பிறந்தநாள் அறநிதியத்தின் சார்பில் வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ள பணத்திற்கு கிடைக்கும் வட்டி ஆண்டு தோறும் சமூகப்பணிக்கு ஒதுக்கப்படுகின்றது. மற்றும் இவ்வாலயத்தின் நிதியிலிருந்து இந்நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களும், வைத்தியசாலைகளும், பாடசாலைகளும் பயன்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தேவஸ்தான நிர்வாக சபையினால் நடத்தப்படும் துர்க்காதேவி மணிமண்டபம் நல்லூர் கந்தன் மேற்கு வீதியில் அமைந்துள்ளது. இந்த மண்டபத்திற்கான காணி நிலத்தை பெருமாட்டி திருமதி விசாலாட்சி அரியகுட்டி அம்மையார் அவர்கள் தர்மசாதனம் செய்துள்ளார். நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நண்பகல் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, நல்லைக்கந்தன் மகோற்சவ காலம் இருபத்தைந்து நாளும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. தவப்பெருந்திரு நாவலர் பெருமான் குருபூசை, தவமுனிவர் யோகர் சுவாமிகளின் குருபூசை, சமயகுரவர்கள் குருபூசை என்பன சிறப்பாக இங்கு நடைபெறுகின்றது. இங்கு இசை நிகழ்ச்சிகள் மற்றும் சமய நிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள், அரங்கேற்ற நிகழ்ச்சிகள், திருமண வைபவங்கள் என்பனவும் இடம் பெற்று வருகின்றன. இந்த மணிமண்டபத்தில் 2015ஆம் ஆண்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மண்டபத்தின் பின்பகுதியில் மூன்றுமாடிகள் கொண்ட புதிய கட்டடமொன்றும் அமைக்கப்பட்டது. விருந்தினர் உணவு மண்டபமும், கருத்தரங்கு மண்டபமும், புதிய கட்டத்துக்குள் நிறுவப்பட்டிருப்பதும் சிறப்புக்குரியது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றி வருகின்ற அறப்பணிகளின் தொடரில் 07.01.2002 இல் ஆலய வளாகத்தில் "சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்" திறந்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழை கிழக்கு பகுதியில் நன்கொடையாகக் கிடைத்த காணியில் வீட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வளர்ந்து திருமணமான பெண்பிள்ளைகளின் நலன் கருதி இவர்களுக்காக புதிய வீடுகள் அமைக்கப்பட்டு குடும்பமாக அங்கு வாழ்ந்து வருகிறார்கள். துர்க்காபுரம் மாதிரிக் கிராமமாக இந்த வீட்டுத்திட்டம் பரிணமித்து வருகின்றது.

முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலையை ஆலய வளாகத்தில் நிறுவிய பெருமை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு உரியது. வடமாகாண சித்த ஆயுர்வேத திணைக்களத்தின் அனுமதியுடன் ஆலய தர்மகர்த்தசபை உறுப்பினர் ஒருவரது இருமாடிவீட்டை தேவஸ்தானம் வைத்திய சாலைக்காக பயன்படுத்தி வருகிறது. இந்த வைத்தியசாலை இருபத்து நான்கு மணிநேரமும் இயங்குவதுடன் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய வசதிகளும் செய்யப்பட்டு உள்ளன.

1990ஆம் ஆண்டுக்கு முன் ஆலய வீதியில் இயங்கி வந்த அந்தணச் சிறுவர்களுக்கான வேதபாராயண பாடசாலை போர்ச்சூழ் நிலைகள் காரணமாக செயலிழந்தது. இப்போது ஆலய திருத்தேர் மண்டபத்தில் மீண்டும் வேதபாராயண பாடசாலை 2016ஆம் ஆண்டு தைப்பூச நாளிலிருந்து இயங்கிவருகிறது.

ஆலயத்தின் அன்னதானப் பணி நீண்ட காலமாகவே இடம்பெற்று வரவதையும் சிறப்பாகச் சொல்லலாம். வாரத்தின் இரு தடவைகள் அதாவது செவ்வாய், வெள்ளி, ஆகிய நாட்களில் இங்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

## பன்னிரு திருமுறைகள் நூல் வெளியீடு

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் மறைவுக்குப் பின்னர், ஒவ்வொரு வருடமும் அவரது குருபூசை தினத்தன்று ஆலய நிர்வாகம் பன்னிரு திருமுறை பாடல்கள் அடங்கிய நூல்களை தொடராக வெளியிட்டுவரும் சிறப்பான கைங்கரியமொன்றை நிர்வாக சபைத் தலைமைப் பதவியை புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட வேளையில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தொடக்கி வைத்தார். அந்த வகையில் வருடந்தோறும் பகுதி பகுதியாக பன்னிரு திருமுறைகள் வெளியிடப்பட்டு வந்ததுடன், அம்மையாரின் பத்தாவது குருபூசை நிகழ்ந்த இவ்வருடத்துடன் பன்னிரு திருமுறைகள் நூல் வெளியீட்டுத் தொடர் சிறப்பாக நிறைவடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆலய பிரதம குருவின் மறைவு

ஆலயத்தின் பிரதம குருவாகப் பணியாற்றி வந்த சிவஸ்ரீ பா.அகிலேஸ்வரக் குருக்கள் அவர்களின் திடீர் மறைவு அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் அதிர்ச்சியையும் மிகுந்த துயரத்தையும் ஏற்படுத்திவிட்டது. இவர் சிறுவயதிலேயே ஆலயத்தில் இணைந்து நாற்பது வருடங்களுக்கும் மேலாக பணியாற்றி வந்துள்ளார். குருக்கள் அவர்கள் இவ்வருடம் (2018) பெப்ரவரி மாதத்தில் காலமானார். இவரது மறைவைத் தொடர்ந்து சிவஸ்ரீ செந்தில்ராஜக் குருக்கள் ஆலயத்தின் பிரதம குருவாகப் பொறுப்பேற்று, ஆலயத்தை நல்ல முறையில் வழிநடத்தி வருகிறார்.

## "அருள் ஒளி" மாதாந்த சஞ்சிகை

துர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றி வருகின்ற பன்முகப்பட்ட சமூகப்பணிகளில் ஒன்றாக "அருள் ஒளி" என்னும் மாதாந்த சமய சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறது. 2002ஆம் ஆண்டு மகோற்சவத்தின் தீர்த்த உற்சவ நாளன்று முதலாவது சஞ்சிகை வெளிவந்தது. ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற சிறப்புமிகு விழாக்கள், விரத அனுட்டான மகிமைகள், சமயக் கட்டுரைகள் போன்ற பல்வேறு அம்சங்களைத் தாங்கி சஞ்சிகை வெளிவருகின்றது.

(தொகுப்பு : அ.கனகசூரியர்)

## அறம் வளர்க்கும் நாயகியே துர்க்காதேவி !

தெல்லிநகர் ஆளவந்தாய் எங்கள் துர்க்காதேவி
தேசமெல்லாம் வாழவைப்பாய் எங்கள் துர்க்காதேவி
சொல்லிலே பொருளாவாய் எங்கள் துர்க்காதேவி
சொல்லடங்கா இன்பம் தந்தாய் எங்கள் துர்க்காதேவி

வெற்றிதரும் கொற்றவையே எங்கள் துர்க்காதேவி
வீறுகொண்ட சண்டிகை நீ எங்கள் துர்க்காதேவி
குற்றமெல்லாம் பொறுத்திடுவாய் எங்கள் துர்க்காதேவி
குளிர்ந்த முகம் காட்டிடுவாய் எங்கள் துர்க்காதேவி

சந்நிதியில் வந்து நின்றால் எங்கள் துர்க்காதேவி
சஞ்சலங்கள் ஓட்டிடுவாய் எங்கள் துர்க்காதேவி
எந்நிதியும் வசமாகும் எங்கள் துர்க்காதேவி
ஈகைக்கோர் தாய்மடியே எங்கள் துர்க்காதேவி

அறம் வளர்க்கும் நாயகியே எங்கள் துர்க்காதேவி
ஆறுதலுக் கொரு நிழலே எங்கள் துர்க்காதேவி
மறம் துடைக்கும் மணிக்கரமே எங்கள் துர்க்காதேவி
மாறாத திருநிறைவே! எங்கள் துர்க்காதேவி

- நிவேதிகா

(தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்புமலர் - 1997)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் நல்வாக்கு

# கேள்வி



கேள்வியாவது நூற்பொருளைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டல். எல்லா நூல்களையுங் கற்றவர்களுக்கு அக் கல்வியினாலாகிய அறிவை மேன் மேலும் வலியுறுத்தலாலும், கல்லாதவர்களுக்கு நல்ல அறிவை உண்டாக்குதலாலும், கற்றவர் கல்லாதவர்களாகிய எல்லாரும் கற்றறிந்தார் சொல்லும் நூற்பொருளைக் கேட்டல் அறிவின் வளர்ச்சிக்கு ஏதுவாம்.

இருமை இன்பங்கட்கும் ஏதுவாகிய கல்வியும், பொருளும், செல்வங்கள் என்று சொல்லப்படுதல் போல, கேள்வியும் அவ்வின்பங்கட்குக் காரணமாதல் பற்றி, கேள்விச் செல்வம் என்று சொல்லப்படும். இதனாலன்றோ, திருவள்ளுவநாயனாரும் 'செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம்' என்றருளிச் செய்தார். பொருட் செல்வம் போலச் சம்பாதித்தல் காப்பாற்றல் முதலியவைகளினாலே துன்பங்களைத் தாராது எப்பொழுதும் இன்பத்தையே தருதலின், இஃது அப்பொருட் செல்வத்தினுஞ் சிறந்ததேயாம்.

கற்றறிந்தார் சொல்லும் உறுதிச் சொற்களும், அவற்றின் பொருள்களும் கேட்குந் தோறும் நினைக்குந் தோறும் இன்பத்தையே தந்து கொண்டிருத்தலிற் பசி முதலிய துன்பங்கள் தோன்றப் பெறாமையால், கேள்வி தன்னை உடையாரை அத்துன்பங்கள் இல்லாத தேவரோ டொப்பாகச் செய்தலினாலும், வறுமையினாலாவது அறிவின்மையினாலாவது துன்பங்கள் உண்டாகிய விடத்துக் கேள்வியினாலாகிய அறிவு அத் துன்பங்களை நீக்கி ஊன்றுகோல் போல் உதவுதலாலும், மெய்ந்நூற்பொருளை அறிந்தார் சொல்லக் கேளாதார் அறிவின்மையாற்றம்மை வியந்து கூறுதலல்லது பணிந்த சொற்களை உடையராக மாட்டாமையாலும், கற்றறிந்தார் சொல்லாலும் நூற்பொருளை சிறிதாயிருந்தாலும், அதனை, அற்பமென்றிகழாது, சிரத்தையோடு யாவரும் கேட்டல் வேண்டும். அக்கேள்விகள் 'பலதுள்ளி பெருவெள்ளம்' என்றபடி திரண்டு, பலவித அறிவுகளையும் வளரச்செய்து மிகுந்த பெருமையைக் கொடுக்கும். கல்வியறிவு மாத்திரம் உடையராய் நல்லொழுக்கம் சிறிதுமில்லாதார் அறிவிலாராதலால், அவர் வாய்ச்சொற்கள் கேட்கத்தக்கனவல்ல.

யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

# போற்றி போற்றி சிவசிவ போற்றி!



அந்தமும் ஆதியும் அகன்றோன் வருக
செந்தண்மை பூண்ட செல்வன் வருக
பந்தமும் வீடும் படைப்போன் வருக
எந்தமை யாளும் இறைவன் வருக
கற்பனை படைத்த கடவுள் வருக
சொற்பதங் கடந்த தொல்லோன் வருக,
பாரொடு விண்ணாய்ப் பரந்தோன் வருக
சீரொடு பொலியுஞ் சிவகவன் வருக
சிந்தா மணியென் தேவன் வருக
நந்தா விளக்கே நலஞ்சுடர் வருக
நீற்றொடு பொலியும் நிமலன் வருக
ஆற்றொடு தோற்றும் அமலன் வருக
அற்புதன் வருக அநேகன் வருக
பொற்புட நடஞ்செய் புனிதன் வருக
விற்பொலி நுதலாள் விமலன் வருக
சொற்றுணை வேதியன்
பொற்றா ளிணைகள் பொலிந்து வாழ்க
கற்றோ ரேத்துங் கழலடி வாழ்க
மற்றோ ரறியா மலர்ப்பதம் வாழ்க
அற்றோர்க் குதவும் அருட்பதம் வாழ்க
தன்னே ரில்லாத் தாளிணை வாழ்க
என்போல் வந்த இணையடி வாழ்க
கண்போற் காக்குங் கழலடி வாழ்க
விண்போல் விளங்கும் மெய்யடி வாழ்க
பெண்பா லுகந்த பித்தன் வாழ்க
மண்மேல் மலரடி வைத்தோன் வாழ்க
தற்பரன் வாழ்க சதாசிவம் வாழ்க
சிற்பரன் வாழ்க சின்மயன் வாழ்க
முழுவதுமாய் நின்ற முதல்வன் போற்றி
தொழுமடி யார்கள் துணைவா போற்றி
என்றுமெ னுளத்தில் இருப்பாய் போற்றி
மன்று ளாடும் மணியே போற்றி
பொன்னு முடலைப் பொறுக்கேன் போற்றி
சென்றடை யாத செல்வா போற்றி
ஆதி போற்றி அரனே போற்றி
சோதி போற்றி சுடரே போற்றி
நீதி போற்றி நிறைவே போற்றி
மாதொரு பாக மலர்ப்பதம் போற்றி
ஏதொரு பற்றிங் கில்லைப் போற்றி
போற்றி போற்றி பொன்னடி யென்னும்
போற்றி போற்றி சிவசிவ போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி, ஆவணி மாத சிறப்புத் தினங்கள் - சிறுகுறிப்பு

### ஆடி அமாவாசை (11.08.2018)

ஆடி அமாவாசை தினமானது பிதிர்க்கடன் செய்வதற்கு சிறந்த நாளாகும். தந்தையை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதமிருந்து இறை வழிபாட்டில் ஈடுபடுவதுடன், தான தருமம் முதலான நற்கருமங்கள் செய்வதன் மூலம் மறைந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் அடையக் கூடியதாக இருக்கும்.

### ஆடிப் பூரம் (13.08.2018)

ஆடிப்பூர நட்சத்திர தினம் உலக மாதாவாகிய அம்பிகைக்கு உரிய சிறப்புத் திருநாளாகும். இந்த நாளில்தான் அம்பிகை திருஅவதாரம் செய்தருளினார் என்றும், அம்பிகை ருதுவாகிய தினம் என்றும் சொல்லப்படுகிறது. அம்பாள் விரதத்திற்கும் தரிசனத்திற்கும் உகந்த தினம் இது. இந்நாளில் பெண்கள் பாற்குடம் எடுத்து, அம்பாளை வழிபாடு செய்வர்.

### ஆவணி மூலம் (21.08.2018)

மாணிக்கவாசக சுவாமிகளுக்காக சுந்தரேஸ்வரப் பெருமான் மதுரை மாநகருக்கு எழுந்தருளிய தினம் ஆவணிமூல நட்சத்திர நாளாகும். அதாவது மாணிக்கவாசக சுவாமிகளை பாண்டிய மன்னன் சிறையிலிட்டு தண்டனை விதித்தபோது, சுவாமிகளை விடுவிப்பதற்காக சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டுவந்து அவரைச் சிறையிலிருந்து மீட்டதே இந்த நாளின் அற்புத சிறப்பாகும். இத்தினம் மதுரையில் பிட்டுக்கு மண் சுமந்த விழாவாகவும் மூலப் பெருவிழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### ஆவணி ஞாயிறு (19.08.2018, 26.08.2018)

எல்லா மாதங்களிலும் ஞாயிற்றுக்கிழமை வருகின்றபோதும், ஆவணி மாதத்தில் வரும் ஞாயிறு தனித்துவமுள்ளது. இம்மாதத்தில் சூரிய பகவான் சிங்கராசியில் சஞ்சரிப்பதாலும் ஞாயிறு முக்கியத்துவம் பெறுகிறது. ஆவணி ஞாயிறு சூரிய விரதத்திற்கும் வழிபாட்டுக்கும் சிறந்த நாளாகும். இந்து மக்கள் இந்நாளில் சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து வழிபாடு செய்வதும் வழக்கம்.

### ஆவணி ஓணம் (24.08.2018)

ஆவணி மாதத்து திருவோண நட்சத்திர நாளன்று ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது. மலையாள தேசத்தவர்களுக்கு இந்த நாள், ஆண்டின் மிகச்சிறந்த தினமாக அமைகிறது. திருவோணம் திருமாலுக்குரிய விசேட நட்சத்திரமாக அமைந்த போதிலும், இந்து மக்களால் சிறப்பித்துப் போற்றப்படுகிறது. சிறுபோக அறுவடை விழாவாகவும் ஆவணி ஓணம் கொண்டாடப்படுகிறது.

## நல்லைக் கந்தன் மகோற்சவம்

வரலாற்றுப் பெருமை வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இம்மாதம் (ஆகஸ்ட்) 16ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.



பத்தாவது நாளாகிய 25ஆம் திகதியன்று மாலை மஞ்சத் திருவிழாவும், 17ஆம் நாளாகிய செப்ரெம்பர் முதலாம் திகதியன்று மாலை அருணகிரிநாதர் உற்சவமும் 18ஆம் நாளாகிய 2ஆம் திகதியன்று மாலை கார்த்திகை உற்சவமும், 20 ஆம் நாளாகிய 4ஆம் திகதியன்று காலை சந்தான கோபாலர் உற்சவமும், அதே தினம் மாலை கைலாசவாகன உற்சவமும், 21ஆம் நாளாகிய 5 ஆம் திகதியன்று மாலை கஜவல்லி மஹாவல்லி உற்சவமும், 22ஆம் நாளாகிய 6ஆம் திகதி காலை தெண்டாயுதபாணி உற்சவமும், அதே தினம் மாலை ஒருமுகத் திருவிழாவும், 23ஆம் நாளாகிய 7ஆம் திகதி மாலை சப்பரத் திருவிழாவும் இடம்பெறவிருக்கின்றன.

24ஆம் நாளாகிய செப்ரெம்பர் 8ஆம் திகதி காலை இரதோற்சவமும், 25ஆம் நாளாகிய 9ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் நடைபெறுவதுடன், 10ஆம் திகதி மாலை இடம்பெறும் பூங்காவன உற்சவத்துடன் நல்லைக் கந்தனின் இவ்வருட மகோற்சவப் பெருவிழா நிறைவுபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநூல்களிலிருந்து சில முத்துக்கள்

**(கடந்த இதழ் தொடர்ச்சி)**

புருஷோத்தமரான மஹாவிஷ்ணு தேவரிஷி நாரதரிடமும் கூறியது - "ஒருவர் காயத்ரி மந்திரத்தை உச்சரித்தால் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து தேவதைகளையும் வழிபாடு செய்த பலன் கிடைக்கும்". பகவான் கீதையில் "சந்தங்களில் காயத்ரி" என்கிறார். சந்தம் என்பது செய்யுள் அமைப்பு அல்லது யாப்பிலக்கணம். செய்யுள் அமைப்பையும் கருத்து விஷேசத்தையும் முன்னிட்டு தாம் சந்தங்களுள் காயத்ரி என்கிறார்.

"காயத்ரி சர்வதேவதாஸ் வரூபம். ஏனென்றால் உயிரைக் காக்கும் சாவித்திரியாகவும், வாக்கைக் காக்கும் சரஸ்வதியாகவும், புத்தியைக் காக்கும் காயத்ரியாகவும் இருப்பதாலாகும். ஒவ்வொரு நாளும் செய்யப்படும் தவறான செயல்களின் விளைவை இது குறைக்கவும் உதவும். இது பொருள்களை கடனுக்கு வாங்குவதை விட்டு பணம் கொடுத்து வாங்குவது போன்றது. கர்மக்கடன் சுமை அதிகரிப்பு இல்லை" (பாபா)

மேற்கூறியவை உலகம் போற்றும் உத்தமர்களால் மக்களுக்கு அன்றும் இன்றும் கூறப்படும் அறிவுரையாகும். இதனை நாம் நம் வாழ்க்கையில் நம்பிக்கையோடு பின்பற்ற வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை
இல்லையெனில்
உனது கல்வியின் மதிப்பு பூஜ்யம்
சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை
இல்லையெனில்
உனது தானம் கருணை எல்லாம் பூஜ்யம்
சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை
இல்லையெனில்
உனது பதவியின் பெயரெல்லாம் பூஜ்யம்
சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை
இல்லையெனில்
உன் புண்ணியச் செயல்களின்
சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை - இவையே
விளைவெல்லாம் பூஜ்யம்
மனித வாழ்க்கையின் அஸ்திவாரம்.

இது ஒரு அர்த்தம் நிறைந்த என்றும் மனதில் பதிய வைத்து உருப்போட வேண்டிய பாடல்.

எங்கள் மனதுக்குள் இருக்கும் தெய்வத்தை மதிக்கப் பழக வேண்டும். "தெய்வத்தின் குரல்" மனதிற்குள் மனச்சாட்சியாக இருந்து எம்மை பாதுகாக்கின்றது. ஆனால் நாம் செவிமடுக்காமல் மனம்போன போக்கில் நாடகம் ஆடுகின்றோம். தெய்வத்திடம் பூரணசரணாகதி அடைந்து, புனிதமான செயல்களில் ஈடுபடவேண்டும்.

நாம் நல்லவர்களுடன் சேர்ந்தால் முன்னேற்றம் அடையலாம். நாம் சற்சங்கத்தைத் தேடிப் போகவேண்டும். எமது சேர்க்கை (Company) யைப் பார்த்து நாம் எப்படியானவர்கள் என்று மற்றையோர் மதிப்பிடுவார்கள். எமது மனதில் தீயவர் என்று தெரிந்தால் விலக வேண்டும். எல்லாம் எமது கையில் தான் தங்கியிருக்கின்றது. அன்னம் பாலை நீரில் இருந்து விலக்கி விடுவது போன்று எமது செயலை மாற்ற வேண்டும். அறிவாளிகளுடன் எமது மனதில் உதிக்கும் ஐயங்களை அகற்றவும், தெரியாத அறிவுரைகளைக் கேட்டு அறியவும் முயற்சிக்க வேண்டும். நல்ல அவதார மொழி அமிர்தங்களை ஓய்வான நேரத்தில் வாசிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அறநூல்களைத் தேடி வாசிப்பது முக்கியம். அவற்றை நடைமுறைப்படுத்தல் அதிலும் முக்கியமாகும். நாம் முழுமனிதர்களாவதற்கு வாசித்தல் உறுதுணை புரியும். வாசித்ததை நேசிக்கப் பழக வேண்டும்.

இறைவழிபாடு செய்வது எல்லோருக்கும் உகந்தது. "அவனின்றி அணுவும் அசையாது". இன, மொழி, சமய வேறுபாடு இன்றி எல்லோரும் பின்பற்றுவது. நாம் இறைவனை நோக்கி ஒரு அடி வைத்தால் இறைவன் எம்மை நோக்கிப் பத்தடி வைப்பான் என்பது சித்தர் வாக்கு. ஒரு அடி வைப்பதற்கும் அவன் அருள் வேண்டும். "அவன் அருளால் அவன் தாள் வணங்கி" என்ற வாசகம் உற்று நோக்கப்படவேண்டியது. சிலர் விளக்கிய பிரார்த்தனையைக் கவனிக்கலாம்.

**காலைப் பிரார்த்தனை**

"இறைவனே! தூக்கம் என்னும் கருப்பையிலிருந்து இப்போது பிறந்திருக்கின்றேன். இன்று நான் செய்யும் செயல்களை எல்லாம், எனது மனக்கண்ணில் எப்போதும் தெரியும் உனக்கு அர்ப்பணமாக்க வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். என் வார்த்தைகள், எண்ணங்கள், செயல்கள் எல்லாவற்றையும் பரிசுத்தமானவையாகவும் பவித்திரமானதாகவும் செய். நான் யாருக்கும் கஷ்டம் தரக் கூடாது. யாரும் எனக்குக் கஷ்டம் கொடுக்க வேண்டாம். என்னை வழிகாட்டி நடத்தி வைப்பாயாக".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவுப் பிரார்த்தனை

"பகவானே இன்று காலை உன்மீது நான் சுமத்திய பாரமான கடமைகள் முடிந்து விட்டன. நீர் தான் என்னை நடக்க வைத்தது, பேச வைத்தது, செயல்பட வைத்தது. ஆகையால் உம் பாதங்களில் நான் பேசியது, நினைத்தது, செய்தது எல்லாவற்றையும் சமர்ப்பிக்கிறேன். என் வேலை முடிந்தது, நான் உன்னிடம் திரும்பி வருகிறேன். என்னை ஏற்றுக் கொள்"

காலத்துக்குக் காலம் உலகில் தோன்றி இருளில் மூடப்பட்ட மனித குலத்தை தமது அறநெறிகளால் விழிப்படையச் செய்த உத்தமர்களை வணங்கி அவர்கள் மொழிந்த அருள் வாக்குகளை மனதில் இருத்தி அதன்படி நல்வாழ்வு வாழ ஆறறிவு படைத்த மனிதருக்கு வல்லமையுண்டு. ஆனபடியினால் "முயற்சி திருவினையாக்கும்" என்று நம்பிக்கையுடன் வெற்றிநடை போடுவோம்.

- கமலாதேவி செல்லத்துரை
சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம்

சிந்தனை விருந்து


## நேரம் பொன்னானது!

காரியம் செய்வது எளிது. ஆனால் அது முறையாகச் செய்யப்படுவதற்கு அதிக கவனம் அவசியமாகின்றது. அலுவலகமானாலும், வியாபாரமானாலும், குடும்ப நிர்வாகமானாலும் ஒன்றுதான். தவறு எங்கே, எந்த வகையில் நடந்தாலும், பலன் பாதகமாகவே இருக்கும். நாம் நமக்காகவும், நாட்டிற்காகவும், கடமைகளைச் செய்கின்றோம் என்பது நினைவில் இருக்க வேண்டும். நாம் கவனத்தோடு காரியங்களைச் செய்து முடிக்கும்போது, மனம் தெம்பாகவும், அமைதியாகவும் அனுபவம் செய்கின்றது. ஆனால், கவனக்குறைவால் பணம், பொருள், அல்லது நேரம் வீணாகி விரயம் ஆகும்போது நமது முன்னேற்றத்திற்கும் ஊறு விளைவிக்கின்றது. சாதாரணமாக, அவ்வப்போது நமது கவனத்திலிருந்து தப்பி இம்மாதிரி விரயம் என்பது ஏற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. ஆனால், இதன் மதிப்பை உணரும் தருணம் வரும்போது, ஒவ்வொரு விநாடியும் சூட்சுமமாக ஆய்வு செய்துகொண்டே இருக்க வேண்டும். கணக்கு என்பது, புத்தகத்தில் எழுதப்படுவது மட்டுமல்ல, வாழ்வில் மனிதனுடைய ஒவ்வொரு இயக்கத்திற்கும் கணக்கு உண்டு. மொத்தத்தில் இந்தக் கணக்கு நேர் செய்யப்பட்டே ஆக வேண்டுமென்பது நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது தான் இயற்கையின் சட்டம் என்பதாகும். (Law of Universe).

ஆதலால், அவ்வப்பொழுது என்னென்ன விதமான விரயம், எப்படி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதில் கவனம் வைத்தால், இதனைத் தவிர்க்க முடியும். பணம், பொருள், சக்தி, நேரம் இவைகளில் உபயோகத்திற்கு முறையான கணக்கு இருக்க வேண்டும். இவற்றில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது நேரம். ஆகவேதான் நேரம் பொன் போன்றது என்கிறோம். பணம், பொருள், சக்தியைக் கூட நாம் திரும்பப் பெறக்கூடிய வாய்ப்பு உண்டு. ஆனால் நேரம் அப்படியல்ல. நேரம் சுதந்திரமானது, அதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. அது வீணாவதுமில்லை, நாம் தான் வீணாக்கிவிடுகின்றோம். கழிந்துகொண்டே இருக்கின்றது. நேரம் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படும் பொழுது உண்டாகும் மனநிறைவு, நமது கணக்கில் வரவாகும்.

- ந.விக்னேஸ்வரன்
சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம்

## தொண்டைமானாறு செல்வச்சந்நிதி வருடாந்த மகோற்சவம்



அருட்பெருமை மிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இம்மாதம் (ஆகஸ்ட்) 11ஆம் திகதியன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 10ஆவது நாளாகிய 20ஆம் திகதியன்று காலை பூங்காவன உற்சவமும், 11ஆவது நாளாகிய 21ஆம் திகதியன்று காலை கைலாச வாகன உற்சவமும், 12ஆவது நாளாகிய 22ஆம் திகதியன்று இரவு இந்திர விமான உற்சவமும், 14ஆவது நாளாகிய 24ஆம் திகதியன்று சப்பரத் திருவிழாவும் இடம்பெறவிருக்கின்றன.

இம்மாதம் 25ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும், மறுநாள் 26ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த மாதம் (ஜுலை) 19 ஆம் திகதியன்று சுவாமி விபுலானந்த அடிகளாரின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது



# பேராசிரியர் வித்தியானந்தன் பார்வையில் சுவாமி விபுலானந்தர்

தமிழகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியராக 1931 ஆம் ஆண்டில் உயர்திரு விபுலானந்த அடிகள் நியமிக்கப்பட்டு, அங்கு மூன்றாண்டு கடமை ஆற்றினார். சிதம்பரத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றி விசாரணைக் குழுவொன்று 1927ஆம் ஆண்டில் மதுரையில் இராமநாதபுரத்து அரசர் தலைமையில் நிறுவப்பட்டது. சிதம்பரத்திற் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என்பதைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் வற்புறுத்த விபுலானந்த அடிகளைச் சென்னைப் பல்கலைக் கழகம் அழைத்தது. அப்போது விபுலானந்த அடிகள் ஈழத்திலுள்ள இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளை மேற்பார்வையிட்டு வந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று மதுரை சென்று இராமநாதபுரத்து அரசர் முன்னிலையிற் சிதம்பரத்திற் பல்கலைக்கழகம் கட்டாயம் நிறுவப்பட வேண்டுமெனச் சான்று கூறினார். இவ்விசாரணைக் குழுவில் முதன்முதலிலே சான்றளித்த பெருமை விபுலானந்த அடிகளுக்குரியது.


விசாரணையின் பயனாகப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமெனக் குழு வேண்டுகோள் விடுத்தது. அதன் பயனாகச் சிதம்பரத்திலே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோன்றியது. அப்பல்கலைக்கழகம் அமைப்பதற்கு இன்றி அமையாதவராக இருந்த செட்டிநாட்டார் சேர்.அண்ணாமலைச் செட்டியார், பல்கலைக் கழகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியராகப் பதவியேற்கும்படி விபுலானந்த அடிகளைக் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க 1931ஆம் ஆண்டு ஆடி மாதம் தமிழ்ப் பேராசிரியப் பணியை ஏற்றுக் கொண்டார். சென்னைப் பல்கலைக்கழகத்திற் கூட அக்காலத்திலே தமிழ்த்துறைக்குப் பேராசிரியர் பதவி இருக்கவில்லை. எனவே தமிழ்நாட்டின் முதற் தமிழ்ப் பேராசிரியர் என்ற பெருமை ஈழத்து விபுலானந்த அடிகளுக்கே உரியது.

ஈழத்து முதற் தமிழ்ப் பேராசிரியர் என்ற சிறப்பும் அடிகளாருக்கே உரியது. 1941ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி பல்கலைக்கழகமாக உயர்வு பெற்ற போதும், 1943ஆம் ஆண்டிலேயே தமிழ்த்துறைக்குப் பேராசிரியர் பதவி வழங்கப்பட்டது. தமிழகத்து முதற் தமிழ்ப் பேராசானாக விளங்கிய உயர்திரு விபுலானந்த அடிகளே ஈழத்து முதற் தமிழ்ப் பேராசானாகவும் அமைய வேண்டுமென ஈழத்து மக்கள் விரும்பினர். இதன் பயனாக விபுலானந்த அடிகளை இப்பதவியை ஏற்கும்படி பல்கலைக்கழகம் அழைத்தது. 1943 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இப்பதவியை விபுலானந்த அடிகள் ஏற்றார்.

1943ஆம் ஆண்டிலிருந்து 1947ஆம் ஆண்டு வரை, நான்கு ஆண்டுகளாகத் தமிழ்ப் பேராசிரியராக விபுலானந்த அடிகள் தொண்டாற்றினார். அக்காலப்பகுதியில் மூன்றாண்டு அவரின் மாணவனாகவும், ஓராண்டு உடனாசிரியனாகவும், அமையும் பேறு எனக்குக் கிடைத்தது.

(நன்றி : வித்தியின் பார்வையும் பதிவும்)

# யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த ஆய்வரங்கு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையும் சுவாமி முருகேசன் அறக்கட்டளையும் இணைந்து நடாத்திய சைவ சித்தாந்த ஆய்வரங்கு கடந்த மாதம் (ஜுலை) 27ஆம், 28ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பேராசிரியர் மா.வேதநாதன் அவர்களது தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

முருகேசன் சுவாமிகளது ஆன்மீக சிஷ்சை மேருபுத்திரி அவர்களது சைவ சித்தாந்தம் தொடர்பான நூல்கள் பற்றிய கருத்துரைகள் ஆய்வரங்கில் சிறப்பு அம்சமாக இடம்பெற்றது. இவர் சைவ சித்தாந்தம் தொடர்பான இருபது நூல்களை எழுதி வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிக் கதைகளை படிக்காதீர்கள். அதிலிருந்து உங்களுக்கு தகவல்கள் மட்டும்தான் கிடைக்கும். தோல்விக் கதைகளைப் படியுங்கள். வெற்றி பெறுவதற்கான புதிய எண்ணங்கள் கிடைக்கும்.

- அப்துல் கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018.08.03 ஆம் திகதி ஆடிப்பெருக்கு விழா

# ஆடிப்பெருக்கு பண்டிகையின் சிறப்பு

ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதை 'பெருக்கு' என்று சொல்லுவதுண்டு. ஆறுகளின் கரைகளில் கட்டப்பட்டுள்ள படித்துறைகளில் பதினெட்டுப் படிகள் அமைக்கப்படுவதுண்டு. இந்தியா காவிரியின் நதிக்கரையிலுள்ள ஊர்களில் மக்கள் நீராடுவதற்கென படித்துறைகள் அமைக்கப் பட்டுள்ளன. ஆடி பதினெட்டாம் திகதி பதினெட்டுப் படிகளும் மூழ்கிவிடும் அளவுக்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் 'பெருக்கு' எனப்பட்டது. ஆடி மாதம் பதினெட்டாம் திகதியன்று ஆடிப் பெருக்கு விழாவாகும். பெரும்பாலும் இந்தியாவிலேயே இந்த ஆடிப்பெருக்கு விழா கொண்டாடப்படுகிறது. ஆடிப்பெருக்கை 'பதினெட்டாம் பெருக்கு' என்றும் அழைக்கப் படுகின்றது.

ஆடிப்பெருக்கு நாளன்று பெண்கள் நதிகளுக்குச் சென்று நீராடுவார்கள். பின்னர் நதியைப் பெண்ணாக நினைத்து வளையல் குலுங்க பூஜை நடத்துவார்கள். வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பூ, கருகமணி போன்ற மங்கலப் பொருட்களை வைத்துப் பூஜை செய்து படைத்து நதியில் விடுவது வழக்கம்.

மாலையில் பலவித சாதங்களைத் தயார் செய்து நதிக்கு நிவேதனம் செய்வார்கள். பின்னர் உற்றார் உறவினர்களுடன் நதிக்கரையில் அமர்ந்து, அந்த உணவுப் பொருட்களை ஒரே குடும்பமாகப் பகிர்ந்து உண்பார்கள். பெண்களிடையே அன்பு, நட்புறவு ஏற்படுவதற்கு ஆடிப்பெருக்கு பண்டிகை உதவுகிறது.

ஆடிப்பெருக்கு நாளன்று சிறுவர்கள் சிறு தேர் அல்லது சப்பரம் கட்டி அவற்றை இழுத்துச்சென்று நதியில் விட்டு மகிழ்வார்கள். பண்டைக் காலத்தில், பழுதடைந்துபோன ஓலைச் சுவடிகளிலுள்ள விஷயங்களை புதிய ஓலைச்சுவடிகளுக்கு மாற்றிக்கொண்டு, பழைய சுவடிகளை ஆற்றில்விடும் வழக்கமும் ஆடிப்பெருக்கு நாளில் இருந்து வந்தது. இந்நாளில் வீடுகள், தோட்டங்கள் ஆகிய இடங்களில் காய்கறி விதைகளை நடுவதும் வழக்கம்.

ஆடிப்பெருக்கு நாளன்று புதுமணப் பெண்கள் தங்கள் தாலியையும் பெருக்கிக்கொள்வர். மணமேடையில் திருமணத்தன்று கட்டப்படும் தாலியை வேறு கயிற்றில் அல்லது சங்கிலியில் மாற்றிக் கட்டுவதே 'தாலிப்பெருக்கு' என்பதாகும். ஆடிப்பெருக்கன்று நீர் பெருகி வருவது போன்று தங்கள் இனிய வாழ்வும் பெருகவேண்டும், தங்கள் கணவன் நீண்டநாள் நலமோடு வாழவேண்டும் என்பதே தாலிப்பெருக்கு கொண்டாடுவதன் நோக்கமாகும்.

தங்கள் வாழ்வுக்கு காரணமாக இருக்கும் நதிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வழக்கம் தமிழர்களிடம் தொன்று தொட்டு இருந்து வருவதை எடுத்துக்காட்டும் வகையிலும் ஆடிப்பெருக்கு பண்டிகை அமைந்திருப்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

(நன்றி : பண்டிகைகள் தரும் பலன்கள்)

# நான்காவது அனைத்துலக முருகபக்தி மாநாடு

மலேசியாவிலுள்ள திருமுருகன் திருவாக்கு திருப்பீடம் நடாத்தும் நான்காவது அனைத்துலக முருகபக்தி மாநாடு இந்துமத அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்துப் பண்பாட்டு நிதியம் என்பவற்றின் ஏற்பாட்டில் இம்மாதம் (ஆகஸ்ட்) 2ஆம் திகதி முதல் நான்கு நாட்களுக்கு கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய கலையரங்கத்தில் இடம்பெறுகிறது.

மலேசியா திருமுருகன் திருவாக்கு திருப்பீடத்தின் முதல்வரும், மாநாட்டு குழுவின் அருட்தலைவருமான தவத்திரு பாலயோகி சுவாமிகள் திருமுன்னிலையில் தினமும் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

முருகபக்தி நெறியை உலகெங்கும் நிலைநிறுத்தும் நோக்கில் நிகழவுள்ள இம்மாநாட்டில் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, சுவிஸ், கனடா, ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அருளாளர்கள், அருட்சிந்தனையாளர்கள், ஆலய பிரதிநிதிகள் மற்றும் முருக பக்தர்கள் என பலர் பங்கேற்கவிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018.07.29ஆம் திகதியன்று பட்டினத்தார் குருபூசை அனுஷ்டிக்கப்பட்டது

பட்டினத்தார் அடிகளுக்கு இறைவன் அருளிய பொன்மொழி

## "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே"




பொருள் :
உலகியல் ஆதாரங்கள் எல்லாமே நிலையற்றது. ஒருவனின் இறுதிப் பயணத்தின் போது அவனுடன் தன் மனைவி, மக்கள், உற்றார், உறவினர் யாரும் உடன் வரமாட்டார்கள். மேலும் அவன் தேடித்தேடி அலைந்து சேர்த்து வைத்த பொன், பொருள், மனை முதலிய எதுவும் உடனும் வாராது. ஏன் "சிறு காதறுந்த ஊசி கூட" அவனின் கடைசிப் பயணத்தின் போது உடன் வாராது. அவன் செய்த புண்ணிய, பாவங்களின் விளைவுகள் மட்டுமே அவனுடன் வரும்.

## முனைவர் அருட்திரு ஊரன் அடிகளார் யாழ். வருகை



தமிழ்நாடு கடலூர் மாவட்டம் சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த முனைவர் அருட்திரு ஊரன் அடிகளார் அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த ஆய்வரங்கில் கலந்துகொள்ள வந்திருந்தார். இதன்போது, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் ஆகிய தலங்களை தரிசித்ததோடு, நல்லைநகர் நாவலர் மணிமண்டபத்திற்கும் சென்று நாவலர் பெருமானின் திருவுருவச்சிலைக்கும் வணக்கம் செலுத்தியிருந்தார்.

## கதிர்காம பாதயாத்திரையின் போது தரிசிக்கப்படும் உகந்தை முருகன் ஆலயம்




வருடம் தோறும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயத்திற்கு பாதயாத்திரை மேற்கொள்ளும் முருக பக்தர்கள் நிறைவுக்கட்டமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள உகந்தை முருகன் ஆலயத்திற்கு வருகை தருவார்கள். இவர்கள் இங்கு தங்கி நின்று, தரிசனம் மேற்கொண்ட பின்னர், காட்டுப் பாதை திறந்தவுடன், இறுதி பதினாறு மைல் தூரத்தையும் கடந்து செல்லக் கதிர்காமம் ஆலயத்தை சென்றடைவதுடன், பின்னர் அங்கிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயத்தை வந்தடைவது வழக்கம்.

(தகவலும் படங்களும் : ந.விக்னேஸ்வரன், சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய துணைத் தூதுவரால் பாராட்டப்பெற்ற சிவபூமி பாடசாலையின் மறைந்த மாணவன் சஞ்சீவன்




கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி மறைந்த சிவபூமி பாடசாலை மாணவன் மிருதங்கக் கலைஞன் ஆனந்தஜோதி சஞ்சீவனின் 45ஆம் நாள் நினைவு நிகழ்வு கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.



யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை தூதரகம் கடந்த வருடம் (2017) நடாத்திய இந்திய சுதந்திர தின வைபவத்தின் போது ஆனந்தஜோதி சஞ்சீவன் சிறப்பான மிருதங்க இசை வழங்கியமைக்காக, அப்போதிருந்த துணைத்தூதுவர் திரு.ஆ.நடராஜன் அவர்களால் பாராட்டுப் பெற்றிருந்தார்.

## நல்லூரில் சர்வதேச யோகா தின விழா (21.07.2018)




யாழ்.யோகா உலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச யோகா தின விழா கடந்த மாதம் (ஜூலை) 21ஆம் திகதியன்று நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.யோகா உலகத்தின் இயக்குநர் திரு.சி.உமாசுதன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி க.சுதாகர், யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவ அலகுத் தலைவர் வைத்திய கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

## உலக கலாசார திருவிழாவில் தமிழர் கலாசாரம் முதலாவது இடம்


கடந்த வாரம் துபாய் நாட்டில் நடைபெற்ற உலக கலாசார திருவிழாவில் சிறந்த கலாசாரமாக தமிழர் கலாசாரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் உள்ளிட்ட நாற்பதுக்கு மேற்பட்ட மொழிகளுக்குரிய கலாசார விடயங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தமிழ் அரங்கம், தமிழ் கலைஞர்கள், தமிழர் பண்பாட்டு விடயங்கள், பாரம்பரிய தமிழ் நூல்கள் போன்றவைகளை நடுவர்கள் பார்த்து வியந்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திக் குறிப்புகள் மூலம் தெரியவருகின்றது.

இந்த கலாசார திருவிழாவில் வங்காள கலாசாரம் இரண்டாவது இடத்தையும், எதியோப்பிய கலாசாரம் மூன்றாவது இடத்தையும் பெற்றிருக்கிறது.

## ஓய்வுநிலை அதிபர் திரு.செ.சோதிப்பெருமாள் மறைவு

ஓய்வுநிலை அதிபரும், இணுவில் கந்தசுவாமி கோயில் அறங்காவலர் சபைத் தலைவரும், சிறந்த சமூக சேவையாளருமான திரு.செ.சோதிப்பெருமாள் (சமாதான நீதிவான்) அண்மையில் காலமானார்.



இணுவில் மத்திய கல்லூரியில் நீண்டகாலம் அதிபராகப் பணியாற்றிய இவர், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தில் முக்கிய உறுப்பினராகவும் விளங்கியவர். பல சமய நிறுவனங்களிலும் இணைந்து பணியாற்றியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் நிறைந்தவர்கள்

# எம் மண்ணில் கலை இலக்கியம் படைத்த சாதனையாளர்

## மாவை வரோதயன்



புகழ்பூத்த ஈழத்து எழுத்தாளராகத் திகழ்ந்தவர் மாவை வரோதயன். இவரது இயற்பெயர் சத்தியகுமாரன். இவர் யாழ்ப்பாணத்தின் வடக்கே உள்ள மாவிட்டபுரம் என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றார். தந்தையின் பணி காரணமாக மட்டக்களப்புக்கு சென்றவர் அங்கு சம்மாந்துறையில் முஸ்லிம் மத்திய கல்லூரியிலும், பின்னர் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். இதற்குப் பின்னர் இவர் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்று கொழும்பு பரீட்சைத் திணைக்களத்திலே பணி புரிந்தார். பின்னர் அவர் பொது சுகாதாரப் பரிசோதகராக வெலிசறையில் உள்ள மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் பணியாற்றினார்.

இவர் ஈழத்து கலை இலக்கிய உலகில் ஒரு கவிதையாளராக, சிறுகதையாளராக, கட்டுரை யாளராக என்று பன்முகப்பட்ட முகங்களைக் காட்டியிருக்கிறார், பல நாடகங்களையும் எழுதியிருக்கிறார். வில்லுப்பாட்டுகளை எழுதி யிருப்பதுடன் அதிலும் பங்குகொண்டிருக்கிறார். தேசியக் கலை இலக்கியப் பேரவையின் முக்கிய உறுப்பினராக இருந்தவர். கொழும்பில் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் இலக்கியக் குழுச் செயலாளராக அவர் நீண்டகாலம் பணியாற்றியவர். சில்லையூர் செல்வராசன் இலங்கை வானொலியில் தொகுத்து வழங்கிய "பா வளம்" "கவிதைக் கலசம்" போன்ற நிகழ்ச்சிகளிலே பங்குபற்றி இருக்கிறார்.

தேசியக் கலை இலக்கியப் பேரவையின் மாசிகையான 'தாயகம்' பத்திரிகையிலே "வலிகாமம் மைந்தர்கள்" என்ற தலைப்பிலே ஒரு தொடர் எழுதி வந்தவர். வலிகாமம் பகுதியிலே வாழ்ந்த மனதைக் கவர்ந்த நபர்கள், பாத்திரங்கள் பற்றி தொடர்ச்சியாக அதில் எடுத்துக்காட்டி இருக்கிறார். இதைத் தவிர ஐம்பெருங் காப்பியங்களை வைத்துக் கொண்டு நாடகங்களையும் எழுதியிருக்கிறார். வினோதன் கலை இலக்கிய மன்றம் ஒவ்வொரு மாதமும் கொழும்பில் நடத்திய நிகழ்விலே அந்த நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

மாவை வரோதயன் 'இன்னமும் வாழ்வேன்' (கவிதைத் தொகுதி), 'வேப்பமரம்' (சிறுகதைத் தொகுதி) ஆகிய இருநூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

சிலகாலம் நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர், 2009 ஆகஸ்ட் 29 ஆம் திகதியன்று தனது 44ஆவது வயதில் காலமானார். இம்மாதம் (ஆகஸ்ட்) 29ஆம் திகதி இவரது ஒன்பதாவது நினைவு தினமாகும்.

# யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொன்னம்பலம் மறைவு



சிறந்த கல்விமானாக விளங்கிய யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபர் திரு.சரவணமுத்து பொன்னம்பலம் கடந்த மாதம் (ஜூலை) 16ஆம் திகதியன்று அவுஸ்திரேலியா சிட்னி நகரில் காலமானார்.

சுன்னாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். விஞ்ஞானத்துறையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து அறுபதுகளில் யாழ். இந்துக் கல்லூரியிலேயே ஆசிரியராக இணைந்து கொண்டவர். பின்னர் அதே கல்லூரியின் பிரதி அதிபரானார். தொடர்ந்து அதிபராக பதவியுயர்வு பெற்று 1984 முதல் 1990 வரை சிறப்பாகச் சேவையாற்றியுள்ளார்.

1991 இல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு மாற்றம்பெற்று அதிபராக கடமையாற்றியதுடன், பின்னர் ஒருவருட காலம் மருதனார்மடம் கல்வி வலயத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்.

இவரது மறைவையிட்டு பல நாடுகளிலுமுள்ள இவரின் மாணவர்கள் அஞ்சலி நிகழ்வுகளை தொடர்ந்து நடாத்தி வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய உதைபந்தாட்ட அணியில் மகாஜனா கல்லூரி வீராங்கனைகள்





இம்மாதம் 8ஆம் திகதி பூட்டான் நாட்டில் ஆரம்பமாகவிருக்கும் ஆசிய உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத் தொடர் போட்டியில் யாழ்.தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த மூன்று வீராங்கனைகள் பங்குபற்றவிருக்கிறார்கள்.

ஜெ.ஜெதுன்சிகா, உ.யோகிதா, சி.தவப்பிரியா ஆகிய மூன்று மாணவிகளும் 14வயது பெண்கள் உதைபந்தாட்ட அணிக்கு தேசிய மட்டத்தில் தெரிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஸ்தாபகருக்கும் முன்னாள் அதிபருக்கும் உருவச்சிலை

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஸ்தாபகர் டானியல் பூக்வர் அவர்களுக்கும், முன்னாள் அதிபர் ஐ.பி.துரைரத்தினம் அவர்களுக்கும் கல்லூரி வளாகத்தில் உருவச்சிலைகள் நிறுவப்படவிருக்கின்றன.

லண்டனில் வசிக்கும் மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்களது ஏற்பாட்டில் இரு பெரியார்களது சிலைகளும் அமையவிருக்கின்றன. இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த மாதம் (ஜுலை) 24ஆம் திகதியன்று கல்லூரி அதிபர் திரு.தி.வரதன் தலைமையில் இடம்பெற்றது. கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும், திரு.ஐ.பரமநாதன் அவர்களும் உருவச்சிலைகள் அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

# சிவாபசுபதி கமம் காணிகள் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பு




கிளிநொச்சி - பன்னங்கண்டி, சிவபசுபதி கமத்தில் 1990ஆம் ஆண்டு தொடக்கம் தற்காலிகமாக காணிகளில் வாழ்ந்து வரும் மக்களுக்கு குறித்த காணிகள் சொந்தமாகவே வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பன்னங்கண்டி சிவாபசுபதி கமத்தில் 1990ஆம் ஆண்டு முதல் வசித்துவரும் மக்கள் தாங்கள் குடியிருக்கும் காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் மற்றும் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைக் கோரி கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் மக்களின் கவனயீர்ப்பு போராட்டம் தொடர்பில் அருட்தந்தை ரி.யோசுவா காணி உரிமையாளர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். இதனைத் தொடர்ந்தே குறித்த காணியை அங்கு தற்காலிகமாகக் குடியிருக்கும் மக்களுக்கே வழங்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.



இதற்குப் பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு அமைவாக கடந்த மாதம் சிவாபசுபதி கமம் 'யோகர் சுவாமிகள் குடியிருப்பு' என பெயர் மாற்றம் செய்யப்பட்டு காணி ஆவணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிலையில் அந்த காணிகளில் வாழ்ந்து வரும் மக்கள், தங்களுக்கு சொந்தமாக காணிகளை வழங்கிய உரிமையாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சைவபரிபாலன சபையினரின் தகவல் குறிப்பு

கோயிலாக்கண்டி அருள்மிகு திருமூல நாயகி சமேத திருமூலேஸ்வரர் திருக்கோயில் தொடர்பாக யாழ்.சைவபரிபாலன சபையின் செயலாளர் திரு.வை.இரகுநாதமுதலியார் அவர்கள் சிவபூமி ஆசிரியருக்கு முகவரியிட்டு 2018.07.26 ஆம் திகதியன்று கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தங்கள் சிவபூமி இதழ் - சிவம் 1 பூமி 5 (10.07.2018) இல் வெளிவந்த மேற்படி கோயில் பற்றிய உண்மை நிலையைத் தங்கட்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இக் கோயில் 1959ஆம் ஆண்டில் பரமசாமி ஐயர் கைம்பெண் நாகம்மா என்பவரால் சைவ பரிபாலன சபையினரிடம் சாதனம் மூலம் ஒப்படைக்கப்பட்டது. கோயில் பிரபலமானது. ஆனால் பூசைகள் அற்றுக் கிலமடைந்து இருந்தது. சைவபரிபாலன சபையார் ரூபா 3000/= வரையில் செலவு செய்து கோயிற் திருப்பணிச்சபையைச் செய்து கொண்டு இருக்கும் காலத்தில் மீசாலையைச் சேர்ந்த சிவசிதம்பர தேசிகர் மனைவி மக்களுடன் கோயில் வளவிற்குள் சபையின் உத்தரவு இன்றிக் குடியேறினார். கோயிற் பனை மரங்களைத் தறித்து, கோயிற் கட்டடத்திற்குத் தயாராகத் தயாரித்த கருங்கற்களையும் உபயோகித்து தமக்கு ஒரு வீடு கட்டிக் கொண்டார். அத்துடன் கோயிற் காணிகளையும், வளவுகளையும் கைப்பற்றிக் கொண்டார். மேற்படி கோயில் திருமூல நாயகருக்கும் திருமூல நாயகிக்கும் ஆலயம் அங்கு இல்லை. கோயிற் திருப்பணியைப் பூர்த்தி செய்து சுவாமியையும் அம்பாளையும் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தல் வேண்டும். தேசிகரை வெளியேற்றி கோயில் திருப்பணியைப் பூர்த்தி செய்தல் சைவபரிபாலன சபையாரது முக்கிய கடமையாகும். அன்னாருக்கெதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கச் சபை முயன்று வருகின்றது.

"திருக்கோயில் முதலியவை அழிந்தால் அவைகளை முன் போலச் செய்தவர் பெறும் பயன் அவைகளை முன் செய்தவர்கள் பெற்ற பயனிலும் ஆயிரம் மடங்கு அதிகமாகும். திருக்கோயில் முதலிய உறுப்புகளிலே ஒரு உறுப்பு கிலமாயினும் அதனை முன் போலச் செய்தவர் பெறும் பயன் முன்செய்தவர் பெற்ற பயனிலும் நூறு மடங்கு அதிகமாகும்" - இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவாக்கு ஆகும். **(யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை 80 ஆவது வருடாந்தக் கூட்டம். செயற்குழுவின் 80 ஆவது ஆண்டறிக்கை. சித்திரை 1967 - பங்குனி 1968).**

தற்சமயம் கோயிலைப் புனருத்தாரணம் செய்யும் வேலைகளில் தேசிகர் ஈடுபட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது. கோயிலில் இருந்த நடேசர் சிலையும் அம்மன் சிலையும் பாதுகாப்புக் கருதி சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன. இக் கோயிலும் அதன் சொத்துக்களும் சைவபரிபாலன சபைக்குரிய நம்பிக்கைச் சொத்துக்கள் என வழக்கு இலக்கம் 5468மூலம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி தீர்ப்பு வழங்கி உள்ளார். இது விடயமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது. **(யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை 92 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம். செயற்குழுவின் 92 ஆவது ஆண்டறிக்கை. சித்திரை 1994 - பங்குனி 2000 வரை)**

கோயிலாக்கண்டி சிவன் கோயில் இக்கோயிலையும் அதன் சொத்துக்களையும் சைவ பரிபாலன சபையின் நம்பிக்கைச் சொத்து என வழக்கு இலக்கம் L/5468 இல் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கி உள்ளார்கள். அங்கு தங்பொழுது அடாத்தாக இருப்பவரை வெளியேற்றத் தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணையில் இருந்துவருகின்றது. **(யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை 89 ஆண்டுப் பொதுக்கூட்டம். செயற்குழுவின் ஆண்டறிக்கை 1978 ஐப்பசி - 1979 புரட்டாதி)**

வழக்குகள் நடைபெற்றுத் தீர்ப்பும் பெறப்பட்டு தேசிகரை வெளியேற்ற சட்டமூலம் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்துவரும் காலத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக நீதிமன்றம் எரிக்கப்பட்டது. அதனால் நீதிமன்றத்தில் இருந்தவை எரிந்துவிட்டன.

இதன் பின்னர் சைவபரிபாலன சபையாரது ஒவ்வொரு ஆண்டறிக்கையிலும் இச்செய்தி தெரிவிக்கப்பட்டே வந்துள்ளது. ஆனால் மேற்கொண்டு சைவ பரிபாலன சபையால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை".

இவ்வாறு, சைவ பரிபாலன சபையின் செயலாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயிலாக்கண்டி அருள்மிகு திருமூலநாயகி சமேத திருமூலேஸ்வரர் திருக்கோயில் புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, மகாகும்பாபிஷேகப் பெருவிழாவும் நடைபெற்று முடிந்த நிலையிலேயே மண்டலாபிஷேகப் பூர்த்தி, நிகழ்வையொட்டிய ஒரு சிறப்பிதழுக்காக திரு.பி.எஸ்.தேசிகர் அவர்களால் எழுதப்பட்ட மேற்படி கட்டுரையையும், ஆலயத்தைப் பற்றிய வேறு குறிப்புகள் மற்றும் படங்கள் என்பனவற்றையும் சிறப்பிதழ் அனுசரணையாளரான திரு.தங்க.முகுந்தன் சிவபூமி பத்திரிகைக்கு வழங்கியிருந்தார்.

(ஆ-ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதம் பிறந்த தினம்

# மறைந்தும் மறையாத தவில் வித்துவான் திரு. வி. தட்சணாமூர்த்தி



ஈழத்து இசை உலகில் பிரபல்யம் பெற்றுத் திகழ்ந்தவர் அமரர் வி. தட்சணாமூர்த்தி அவர்கள். சிறந்த ஒரு தவில் வித்துவான் என்ற வகையில் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் பேரபிமானத்தைப் பெற்றிருந்தவர்.

இவர் யாழ்.இணுவில் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆறாவது வயதிலேயே தந்தையாரிடம் தவில் பயிற்சியைப் பெற்று யாழ் வண்ணை காமாட்சிசுந்தரம் என்பவரிடம் விரிவாகவும் நுணுக்கமாகவும் பயின்று சில காலத்தில் அரங்குகளில் தவில் கச்சேரி நிகழ்த்த ஆரம்பித்துவிட்டார். இத்துடன் நின்றுவிடாது இந்தியப் பெருங்கலைஞரான நாச்சிமார் கோவில் ராகவப் பிள்ளையிடம் மேலும் லயசம்பந்தமான நுணுக்கங்களைப் பயின்று, அவருடன் சேர்ந்தும் தவில் வாசிக்கும் பேற்றையும் பெற்றவர். இதற்கும் மேலாக இந்திய நாதஸ்வர வித்துவான்களான காரைக்குறிஞ்சி அருணாசலம், ஷேக் சின்னமௌலானா சாகிப், நாமகிரிபேட்டை கிருஷ்ணன், ரி.என்.ராஜரத்தினம் பிள்ளை போன்றவர்களுக்கும் இந்தியாவில் பல கச்சேரிகளில் தவித்து வாசித்து பாராட்டுக்களையும் தங்கப் பதக்கங்களையும் பெற்றவர். தனது திறமைமிகு தவில் வாசிப்பினால் பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுக்கொண்ட இவருக்கு 'லயஞான குபேரபூபதி' என்ற பட்டம் பெயருடன் இணைந்து விட்டது.

*1933.08.26ஆம் திகதி பிறந்த தவில் கலைஞர் வி.தட்சணாமூர்த்தி அவர்கள் 1975.03.13ஆம் திகதியன்று தனது 42ஆவது வயதில் காலமானார்.*

## இணுவிலில் தவத்திரு பெரிய்ண்ணன் சுவாமிகள் சமாதி நினைவாலயம்

இணுவில் சாந்தலிங்கேஸ்வரர் ஆலய வளாகத்தில், தவத்திரு பெரியண்ணன் சுவாமிகளது சமாதி நினைவாலயம் கடந்த மாதம் (ஜுலை) 18ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது.


மேற்படி ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த சுவாமிகள், கடந்த மாதம் சமாதி நிலையடைந்தார். திருக்கேதீஸ்வரம் கௌரி அம்பாள் பாடசாலையில் நீண்டகாலமாக அதிபராகப் பணியாற்றியவர். பின்னாளில் ஆத்மஞானநிலை பெற்றவராக பலரை ஆற்றுப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாணம் கலாபூஷணம் வீரசிங்கம் மறைவு



சிறந்த நாடகக் கலைஞரும், எழுத்தாளரும், வைத்தியருமான கலாபூஷணம் காளியப்பு வீரசிங்கம் அவர்கள் கடந்த வாரம் காலமானார். கிழக்கு மாகாணம் சேனையூர் கட்டைப் பறிச்சான் என்ற இடத்தைச் சேர்ந்த இவர் வில்லிசையிலும் திறமை மிக்கவர். மொழிப்பற்றுமிக்க கலைஞராகவும் திகழ்ந்தவர்.

## ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் புதிய சித்திரத் தேர்



கிழக்கிலங்கையில் வரலாற்றுப் புகழ்பெற்ற மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா கடந்த மாதம் (ஜுலை) 27ஆம் திகதியன்று இடம்பெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஆதி சௌந்தரராஜ குருக்களின் பூசை கிரியைகளைத் தொடர்ந்து 39 அடி உயரமான சித்திரர்தேரின் வெள்ளோட்டம் இடம்பெற்றது.

யாழ். புத்தூர் காளிகா சிற்பாலய ஸ்தபதி சிற்பகலா வினோதன் செ.பாலச்சந்திரன் தலைமையிலான கலைஞர்களால் புதிய சித்திரத்தேர் வடிவமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நேர்காணல்

# திருவாசக அரண்மனை கடவுளால் அமைக்கப்பட்டதொரு கற்கோயில்

கணபதி சர்வானந்தா

வான் கலந்த மாணிக்க வாசக
நின் வாச கத்தை
நான் கலந்து பாடுங்கால்
நற்கருப் பஞ்சாற் றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்
தீஞ்சுவை கலந்து என்
ஊன் கலந்து உயிர் கலந்து
உவட்டாமல் இனிப் பதுவே"

என்று திருவாசகத்தில் பெருமை பற்றிப் பாடியிருக்கிறார் வள்ளலார்.

ஜி.யு.போப் திருவாசகத்தை போப்பை மொழிபெயர்க்க ஊக்கப்படுத்திய நிகழ்வு நெகிழ்ச்சியானது. தனது முதுமைக் காலத்தில் பிரித்தானியாவுக்குத் திரும்பிச் சென்ற போப் தனது நண்பரோடு பேசிக் கொண்டிருந்தபோது திருவாசகத்தைப் பற்றியும் விவரித்திருக்கிறார். திருவாசகத்தின் பால் கவரப்பட்ட அவரது நண்பரே திருவாசகத்தை ஆங்கிலத்தில் பதிப்பிக்க வேண்டும் என போப்பை ஊக்குவித்தவர். ஆனாலும் முதலில் போப் அதற்கு உடன்படவில்லை. "அது பாரிய பணி, நீண்ட காலமாகலாம். அதுவரை நான் உயிரோடு இருப்பேனோ! என்று எனக்குத் தெரியாது" என்று கூறி, தனது முதுமையையும், தள்ளாமையையும் காரணம் காட்டி மறுத்திருக்கிறார். ஆனால் அவரது நண்பர் விடவில்லை. "ஒருவர் தன்னை உன்னதமான பணியில் ஈடுபடுத்திக் கொண்டால் போதும். உற்சாகம் வந்துவிடும். முதுமை காணாமற் போய்விடும். வாழ்வு நீண்டுவிடும்.இதை அற்புதமாய் செய்து முடிக்க உன்னால்தான் முடியும். அதற்குரிய பக்குவம் உன்னிடம் உண்டு. நிச்சயம் அந்தப் பணியை நிறைவேற்றுவாய்" – என்று சொல்லிக் கொடுத்த ஊக்கத்தால் போப் அவர்கள் தனது எண்பதாவது வயதில் அப் பணியை நிறைவேற்றி இருக்கிறார். இவர் 1837இல் தமிழைப் படிக்கத் தொடங்கியவர். 1900 இல் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். "என்னுள் இருக்கின்ற ஆழமான உணர்ச்சிகளே இத்தகைய இலக்கியப் பணிகளை எனக்கு நெருக்கமடையச் செய்திருக்கின்றன" என்று குறிப்பிட்ட போப் அவர்கள் – தான் இவ்வுலகை விட்டுச் சென்ற 88 வயதில் 1908 இற்கு முன்னர் அவர் எழுதிய குறிப்பொன்றில் – "எனது கல்லறையை எழுப்ப செலவாகின்ற தொகையில் ஒரு பகுதியை தமிழரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். அத்துடன் எனது கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன்' என்ற குறிப்பும் இடம்பெற வேண்டும்" – என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படி உலகறிந்த திருவாசகத்திற்கு யாழில் ஒரு அரண்மனையை அமைத்திருக்கின்றனர் சைவர்கள். "பல எலிகள் ஒன்று சேர்ந்தால் புற்றெடுக்காது" – என்ற வாசகத்தைப் பொய்ப்பிக்கின்ற வகையில் உலகளாவிய ரீதியில் வாழுகின்ற பல சைவத் தமிழ் பெருமக்கள் ஒன்றிணைந்து இக் கைங்கரியத்தைச் செய்து முடித்திருக்கின்றனர். அதை முன்னின்று நடத்திச் சென்ற செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனை நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் சந்தித்தேன். சிவபூமி அறக்கட்டளையினூடாக இன்னொரு பணியையும் முன்னெடுத்திருக்கிறார் அவர்.திருவாசக அரண்மனை என்ற முன்னெடுப்பு ஒரு காலத்தின் கட்டாயம் என்பது பல தமிழ் இலக்கிய வாதிகளுடைய கருத்தாக அமைகிறது.

**"வணக்கம். வழமையாக இது போன்ற கைங்கரியங்கள் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற திருவாசக அடிகளின் உட்கருத்தை அடியொற்றியே நடைபெறுவதாகத்தான் நான் அறிந்திருக்கிறேன்.எனவே இத் திருவாசக அரண்மனையைக் கட்ட வேண்டும் என்ற உந்து சக்திக்குப் பின்புலமாக என்ன உண்டு? என்ன நடைபெற்றது? இறை காட்சி கொடுத்துச் சொன்னதாக... ஏதாவது சம்பவம் இடம் பெற்றதா?"**

ஆம். அதுபோன்ற மெய் சிலிர்க்க வைக்கும் சம்பவம் ஒன்று திருவண்ணாமலையில் நடைபெற்றது. 2016 இல் தமிழ் நாட்டு ஓதுவார் சங்கத்தால் நடத்தப்பட்ட திருமந்திர மாநாட்டில் சிறப்புரையாற்றச் சென்றிருந்தேன்.திருவண்ணாமலை ஆலயத்தின் வடக்கு வீதியிலே உள்ள மண்டபத்தில் இரண்டு நாட்களாக அம்மாநாடு நடைபெற்றது. இரண்டு நாட்களும் நான் உரையாற்றினேன். இரண்டாவது நாள் நான் உரையாற்றிவிட்டு உணவுக்காக வெளியே வந்தவேளை அங்கு காணப்பட்ட படிகளில் ஒன்றில் ஒரு பெரியவர் அமர்ந்திருந்தார். அவர் என்னைச் சைகை காட்டி அழைத்தார். அழுக்கு வேட்டி, நீர் காணாத சரீரம் என அவர் புறத்தோற்றம் என்னை ஒரு கணம் சிந்திக்க வைத்தது. இருந்தும் என்னை மீறிய ஒரு சக்தியினால் ஆட்கொள்ளப்பட்டு அவர் அருகே சென்று உட்கார்ந்து கொண்டேன். திருவாசகத்தைப் பற்றியும், திருமந்திரத்தைப் பற்றியும் பேசத் தொடங்கினார். நான் அன்று அங்கு பேசிய வரிகளைச் சொல்லி மீதி வரிகளையும் தான் சொல்லி, சைவத் தமிழர்களின் போற்றத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிஷங்களில் முதன்மையானது திருவாசகம் என்றும், குறிப்பாக ஈழத் தமிழர் திருவாசகத்தை நேசிப்பது தனக்கு மிக மகிழ்சியைத் தருகிறது என்றும், "நான் இன்னொன்றையும் கேள்விப் பட்டிருக்கிறேன். அங்கு பாடசாலைகளிலே சிவபுராணத்தைப் பாடுகின்றனராம். கோயில்களிலோ திருவாசக முற்றோதல் நிகழ்கிறதாம். எழுத்தறிவில்லாத காலத்திலேயே பாமரமக்கள் கேள்வி ஞானத்தினால் திருவாசகத்தைக் கற்றுச் சிறப்புறப் பாடி வந்திருக்கின்றனராம். மரண வீட்டிலும் திருப்பொற்சுண்ணம் எனும் திருவாசகத் தேனைப் பாடியே ஈமக்கிரியைகள் நடைபெறுகின்றனவாம். எனவே யாழ்ப்பாணம் ஒரு புண்ணிய பூமி " என்றும் சொன்னார். அவற்றைக் கேட்டதும் என் மெய் சிலிர்த்தது.

அத்துடன் அவர் விடவில்லை. திருவாசகம் ஒரு தத்துவவியல். மேலை நாட்டவர் தற்போது மேலை நாட்டுத் தத்துவவியல் என்றும் தென் கிழக்குத் தேசத் தத்துவவியல் என்றும் இரண்டாகப் பிரிக்கத் தொடங்கிவிட்டனர். ஆனால் தத்துவத்திற்குக் கடவுளையும், தத்துவத்திற்கு வார்த்தைகளையும் சொன்ன ஒரு உயர்ந்த சமயம் சைவம். எனவே சைவசமயத்தில் ஏராளமான தத்துவ நூல்கள் உண்டு. அவற்றுள் திருவாசகம் ஓர் ஒப்பற்ற தத்துவ நூல். எனவே இந்தத் திருவாசகத்தை இலங்கை மண்ணிலே அழியாது காப்பாற்ற வேண்டும். இதுவரை காலமும் அழியாது பாதுகாத்துவரும் திருவாசகத்தை அடுத்த சந்ததிக்குக் காப்பாற்றிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு உன்னிடம் உண்டு. எனவே அதற்காகச் சில காரியங்களை நீ செய்ய வேண்டும் என்று அந்தப் பெரியவர் சொன்னார். உடனே அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று அவரிடம் கேட்டேன். அழியாது அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்றார். உடனே நான் சொன்னேன் "யாழ்ப்பாணத்தில் இரண்டு பெரியவர்கள் திருவாசகத்திற்கு உரை எழுதியிருக்கிறார்கள். பலர் அதனை அச்சில் புத்தகமாகப் பதிப்பித்திருக்கிறார்கள்" - என்றேன். அதற்கு அவர் சிரித்துவிட்டுச் சொன்னார் " நான் நூல் பதிப்பதைச் சொல்லவில்லை. மன்னர்கள் பல முயற்சிகளைச் செய்தார்கள். கருங்கல்லிலே கோயில்களைக் கட்டினார்கள். கருங்கல்லிலே எழுத்துக்களையும் பதித்திருக்கிறார்கள். அதுபோல திருவாசகத்தைக் கல்லிலே பதிக்க வேண்டும். இயற்கை அனர்த்தத்தினாலோ பிற இன்னல் களினாலோ திருவாசகம் அழியாது அந்த மண்ணிலே நிலையாக இருக்க வழி செய்" என்றார். கருங்கல்லிலே பதிக்கச் சொல்லுகிறீர்களே, யாழ்ப்பாணத்திலே கருங்கற்கள் இல்லையே என்றேன். அதற்கு அவர் பதில் சொல்கிறபோது தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய ராஜராஜ சோழனுக்குத் தஞ்சையிலே கருங்கற்கள் கிடைக்க வில்லை. ஆனால் அவன் 216அடி விமானத்தை மக்கள் இன்றைக்கும் வியக்கின்ற வகையில் வேறொரு இடத்திலிருந்து கற்களைக் கொண்டு வந்து கட்டினான். ராஜராஜனின் அரண்மனை இன்று இல்லை. அவனின் சமாதி இல்லை. ஆனால் அவன் கட்டிய அந்தக் கற்கோவில் இன்றும் அழியாது காப்பாற்றப்பட்டு இருக்கிறது. எனவே திருவாசகத்தைக் கல்லில் பதிக்க முயற்சி செய். அது காப்பாற்றப்படும். முயற்சிக்குப் பலனுண்டு என்றார். அவரிடம் விடைபெற்ற அந்தக் கணத்திலேயே திருவாசக அரண்மனை என்ற விடயம் என்னுள் முளைவிடத் தொடங்கிவிட்டது. ஆனால் ஊருக்குத் திரும்பிய சமயந்தொட்டுப் பலரிடம் இந்த விடயத்தைச் சொன்னதும் எவரும் இதைக் கட்டி முடிக்கலாம் என்று சொல்லவில்லை. எதிர்மறைக் கருத்துக்களையே சொன்னார்கள். எவரும் ஆர்வம் காட்டவில்லை. "தற்போது பல வழிகளிலே திருவாசகம் இணையத்தில் பாதுகாக்கப் பட்டிருக்கிறது. எனவே இது அவசியமற்ற விடயம்" என்று சொன்னார்கள். இருந்தும் என்னுள் இந்த முயற்சி சுடர்விடத் தொடங்கியது.

**(குளோபல் தமிழ் நியூஸ்)**

(மிகுதி அடுத்த இதழில்)


## சிவபூமி
## மாதாந்த செய்திப் பத்திரிகை

**சந்தா விபரம்**

சிவபூமி - மாதாந்த செய்திப் பத்திரிகைக்கு வருடாந்த சந்தா செலுத்துவதன் மூலம் கிரமமாக பத்திரிகையை பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக ஒவ்வொரு மாதமும் பத்திரிகை அனுப்பிவைக்கப்படும்.

**சந்தாப் பணத்தை பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யலாம்.**

**Hatton National Bank - Chunnakam**
**Sivapoomi Trust - 117020080261**

சந்தாப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்த பின்னர் அது தொடர்பாக சிவபூமி அறக்கட்டளை அலுவலகத்திற்கு தெரிவிக்கவும்.

வருடாந்த சந்தா (தபாற் செலவு உட்பட)

உள்நாடு : ரூபா 500/=

வெளிநாடு : 25$ (அமெரிக்க டொலர்)

**தொடர்புகளுக்கு : சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

**தொலைபேசி இல : 021 222 7938**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த ஆய்வரங்கு (27.07.218, 28.07.2018)








## தென்னிந்தியா பெரிய குத்தவைக்கரை வீரனார் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற குடமுழுக்கு வைபவம்







யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்வின் போது (1977) பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) முதலான பேராசிரியர்கள், மருத்துவ நிபுணர்கள் உட்பட ஏனையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered in the Dept.of Post of Sri Lanka Under No. QD/194/News/2018

மகோற்சவப் பெருவிழா
நடந்துகொண்டிருக்கும்
மாவைக் கந்தன் ஆலயத்தின்
எழில்மிகு கோபுரம்



இம்மாதம் 10ஆம் திகதி இரதோற்சவம்
11ஆம் திகதி தீர்த்தோற்சவம்

## அருள்மிகு செல்வச்சந்நிதி ஆலயம்



வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

## எழில்மிகு நல்லைக் கந்தன் ஆலயம்



வருடாந்த மகோற்சவம்
இம்மாதம் 16ஆம் திகதி
ஆரம்பமாகின்றது.



**Our Services**

OffSet Printing
Book Binding
Screen Printing



ISBN 978-955-7420-00-4

இந்தப் பத்திரிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது. (01.08.2018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org